
## திராவிடத்தால் வாழ்கிறோம்

797

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

5

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

## மொழிப்போரில் இஸ்லாமியர்களை இணைத்த பெரியார்!

தமிழ்நாட்டுச் சிறுபான்மையினர், திராவிட அரசியலை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால், பெரியாரின் தீர்க்கமான அரசியல் பார்வை உள்ளது. தேசியவாதத்தை ஏற்றுக்கொண்ட சிறுபான்மையினர், பிரிவினைக் காலத்தில் தங்களை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதைப் போல, தமிழ்நாட்டில் நிகழவில்லை. அதே காலகட்டத்தில் முஸ்லிம் லீக் அரசியலை இங்கு தொடர்வதற்கான ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதேநேரத்தில், திராவிட அரசியல் சார்பு எடுத்த சிறுபான்மையினர் மொழி சார்ந்த பிரச்சினையின்போது, எடுத்த நிலைப்பாடு, திராவிட இயக்கங்களுக்கும் சிறுபான்மையின ருக்குமான உறவினை மேலும் பலப்படுத்தியது எனலாம்.

1937-ஆம் ஆண்டில், தொடக்கப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப்பாடமாக்கும் முடிவை, மதராஸ் மாகாண முதலமைச்சராக இருந்த ராஜாஜி அறிவித்தார். அதுதான் முதல் இந்தி எதிர்ப்புப் போருக்கு வித்திட்டது என்றாலும், அதற்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தென்னிந்தியாவுக்குள் இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் தொடங்கியிருந்தன. தென்னிந்தியாவில் இந்தியைப் பிரபலப்படுத்தும் விதமாக, இந்தி பிரச்சார சபாவை 1918-ஆம் ஆண்டில் தொடங்கிவைத்தார் காந்தி.

ராஜாஜி, சத்தியமூர்த்தி ஐயர், கே.சந்தானம் போன்ற அன்றைய காங்கிரஸின் முன்னணித் தலைவர்கள் அனைவரும் இந்தியை ஊக்குவிப்பதை, முக்கியக் கொள்கையாகவே கொண்டிருந்தனர். இந்தியைப் பரப்புவதற்கான நிதியும் வடக்கில் இருந்து ஏகபோகமாகக் கிடைத்தன. இந்தியைக் கற்பதும், இந்தியில் பேசுவதும் மற்ற மாநிலங்களுக்கு, ஹீரோயிச மனப்பான்மையை ஏற்படுத்தும் அளவுக்கு, இந்தி பிரச்சாரங்கள் மேலோங்கி இருந்த காலகட்டமாக அது மாறியது.

ஆனால், காங்கிரஸில் இருந்து வெளியேறி, ‘குடிஅரசு’ இதழைத் தொடங்கிய அடுத்த ஆண்டே (1926) இந்தி ஆதிக்க முயற்சி நடப்பது தொடர்பாக, எச்சரிக்கை செய்தார் பெரியார். இது ஆரிய கலாச்சாரத் திணிப்பு என்று நேரடியாக எதிர்த்தார். பெரியாரின் தொடர் எச்சரிக்கையானது, ராஜாஜி 1937-இல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிய போது பெரும் போராக வெடித்தது.

இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக இந்த முதல் போரில் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மட்டுமின்றி, தமிழ் அறிஞர்கள், பெண்கள் எனப் பலரும் களம் கண்டனர். அதில் தவிர்க்க முடியாத தனிப்பெரும் அங்கமாக இஸ்லாமியர்களும் இருந்தனர். ஏனெனில், அதற்கு முன்பிருந்தே சுயமரியாதை இயக்கம் இஸ்லாமியர்களை ‘திராவிடத் தமிழர்’ அங்கமாகவே அரவணைத்திருந்தது. முஸ்லிம்களிடம் தமிழ் உணர்வு மேலோங்கி இருந்தது. குறிப்பாக, முஸ்லிம்கள் தமிழுக்கு அடுத்து, இரண்டாவது இடத்தில்தான் உருதுவை வைத்திருந்தனர்.

### சட்டமன்றத்தில் முதல் குரல்

அதனால் முதல் இந்தி எதிர்ப்புப் போரில் இஸ்லாமியர்கள் பங்கு பரந்துபட்டதாக இருந்தது. குறிப்பாக, முதல் இந்தி எதிர்ப்புப் போரில் தமிழ்நாடு முஸ்லிம் லீக் தவிர்க்க முடியாத அளவுக்குப் பெரும்பங்காற்றியது. இந்தித் திணிப்புக்கு எதிராக சட்டமன்றத்தில் ஒலித்த முதல் குரல் இஸ்லாமியர் குரல்தான். சட்டமன்றத்தில் முதன்முதலில் முழங்கியவர் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த பி.கலிஃபுல்லா.

அதன்பின்னர், வட இந்தியாவில் இந்தியைத் திணித்து, உருதுவை அழிக்க நடக்கும் முயற்சிகள் குறித்தும், காரசாரமாக விவாதங்களை நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் தமிழ் இஸ்லாமிய இதழான ‘சமரசம்’ இதழின் ஆசிரியர் சுல்தான் பாக்தாதி பங்கெடுத்தார். அவர் மட்டுமல்ல, வேலூரரைச் சேர்ந்த சர்ஃபுதீர்ன், திருப்பூரைச் சேர்ந்த மொஹிதீன் ஆகிய இஸ்லாமியத் தலைவர்கள் கலிஃபுல்லாவுடன் இணைந்து, அந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

1938-இல் திருச்சியில் இருந்து 100 பேர் கொண்ட இந்தி எதிர்ப்புப் படை சென்னை நோக்கிப் புறப்பட்டது. இதற்கான வழியனுப்பு விழாவை, திருச்சியில் பெரியார் நடத்தினார். அவ்விழாவிலும் கலிஃபுல்லா பங்கெடுத்து, இந்தித் திணிப்புக்கு எதிராக வீறுகொண்டு




எழுப்பினார் கலிஃபுல்லா. “இறந்து கொண்டிருக்கிற இந்தி மொழிக்கு காங்கிரஸ் உயிரூட்டிக் கொண்டிருக்கிறது” என்ற கடும் விமர்சனங்களைத் துணிச்சலாக வைத்தார்.

நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாக்களில், பெரியாரும் அண்ணாவும் பலமுறை பங்கெடுத்ததைப் போலவே, திராவிட இயக்க நிகழ்ச்சிகள், மாநாடுகளில் இஸ்லாமிய சமூகத் தலைவர்களான தாவூத் ஷாவும், கலிஃபுல்லாவும் தொடர்ச்சியாகப் பங்கெடுத்து வந்துள்ளனர். 1939-இல் திருச்சியில், பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு காஜா மியான் ராவுத்தர் ஆதரவு தெரிவித்தார். வாணியம்பாடி அருகே நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் இரண்டாயித்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் திரண்டனர். பொறையாரில் நடைபெற்ற கருப்புக்கொடி போராட்டத்தில் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த மொஹிதீன் பாக்வி பங்கேற்றார்.

குறிப்பாக, 1937-ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற வட ஆற்காடு மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் கலிஃபுல்லா பங்கேற்றார். கோவையில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாவட்ட மாநாட்டில் தமிழ்க்கொடியை ஏற்றினார். 1937-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் தேதி, அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் பங்கேற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் முழங்கினார். 1938-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1-ஆம் நாள் திருச்சியில் புறப்பட்ட இந்தப் படை 1938-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாள் சென்னை வந்தடைந்தது. 42 நாட்கள் 577 மைல் தூரம் நடந்தே வந்து மக்களிடம் இந்திக்கு எதிராகப் பரப்புரை செய்தனர். இறுதியாக, சென்னை கடற்கரையில், லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் பயண நிறைவுக்கூட்டம் நடைபெற்றது.

> **இயல்பாகவே ‘சூத்திரர்கள்’ என்ற தன்மையை ஏற்றுக்கொண்டதாகும் என ‘சுயமரியாதை இயக்கம்’ பிராமணர்களை ‘பார்ப்பனர்கள்’ என்று குறிப்பிடத் தொடங்கியது.**

அந்தக் கடற்கரைக் கூட்டத்தில்தான் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று பெரியார் முதன்முதலில் முழக்கம் எழுப்பினார். பெரியார் மீது வழக்குப் பதிந்து சிறைக்குத் தள்ளியது அன்றைய ராஜாஜி அரசு. எதிர் வழக்காடாத பெரியார் சிறைத்தண்டனையை ஏற்றார் என்ற வரலாறு பலரும் அறிந்ததே. ஆனால், அந்தக் கடற்கரைக் கூட்டத்தில் இஸ்லாமியப் பிரதிநிதியாக கலிஃபுல்லா பங்கேற்றார் என்பது பலரும் அறியாத வரலாறு. அதுமட்டுமல்ல, கடற்கரை கூட்டத்தில் கலந்துகொண்ட இஸ்லாமியர்கள் பலரும் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருந்த மேடையை கவனித்துக்கொண்டே, மேற்கு நோக்கி தொழுகையையும் கடைப்பிடித்தனர்.

### அரசியல் பிணைப்பு

வேலூர் சர்புதீன் அக்கூட்டத்தில் பெரியாரின் பணிகளைப் பாராட்டிப் பேசியதுடன், இந்தித் திணிப்புக்கு எதிராகவும் முழங்கினார். வர்ணாஸ்ரம படிநிலையான ‘பிராமணர்கள்’ என்ற சொல்லாடலை ஏற்றால், இயல்பாகவே ‘சூத்திரர்கள்’ என்ற தன்மையை ஏற்றுக்கொண்டதாகும் என ‘சுயமரியாதை இயக்கம்’ பிராமணர்களை ‘பார்ப்பனர்கள்’ என்று குறிப்பிடத் தொடங்கியது. கடற்கரைக் கூட்டத்தில் பேசிய சர்புதீனும் ‘பிராமணர்கள்’ என்ற பதத்தைப் பயன்படுத்தாமல் ‘பார்ப்பனர்கள்’ என்று பேசினார். சுயமரியாதை இயக்கத்தோடு இஸ்லாமியர்கள் இணைந்திருக்கவில்லை, பிணைந்திருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தியது அவரது பேச்சு.

மொழி காக்கும் அந்தப் போரில் முன்கள வீரர்களாய் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இஸ்லாமியர்களின் இந்தி எதிர்ப்பு வரலாறு விரியும்.

...நீளும்

## இதற்கு மேலும் விமர்சிக்க முடியாது!

‘புல்டோசர்களால் வீடுகளை இடிப்பது, மனிதத் தன்மையற்ற செயல்’ என உத்தரப் பிரதேச அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. உத்தரப் பிரதேசம் உள்பட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இஸ்லாமியர்களுக்கு எதிராக, ‘சங்பரிவார் அமைப்புகள்’ தொடர்ந்து அச்சுறுத்தல் அளித்து வருகின்றன. எதிர்வினையாற்றும் இஸ்லாமியர்கள் மீது கடும் நடவடிக்கைகளை எடுக்கும் மாநில அரசுகள், வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்களின் வீடுகளை, புல்டோசர் மூலம் இடித்துத் தள்ளுவதை வழக்கமாக வைத்துள்ளனர். இதன்மூலம் இஸ்லாமியர்கள் வாழ்விடங்களை இழந்து, சொந்த நாட்டிலேயே அகதிகளைப் போல வாழும் நெருக்கடிகளை உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் சந்தித்து வருகின்றனர்.

தற்போது ஆளும் அரசின் புல்டோசர் நடவடிக்கைகள், மகாராஷ்டிர மாநிலத்திலும் நீண்டுள்ளன. ஏற்கெனவே, புல்டோசர் நடவடிக்கைகளுக்கு எதிராக கடும்கண்டனம் தெரிவித்திருந்த உச்சநீதிமன்றம், மீண்டும் உ.பி.அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

இந்த முறை பிரயாக்ராஜ் நகர மேம்பாட்டு வாரியத்தின் மூலம், இஸ்லாமியர் வீடுகளை மட்டும் குறிவைத்து இடித்து வருகின்றனர். இதற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிமன்றம், இடித்துத் தள்ளப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டுள்ளது. முக்கியமாக இந்த நடவடிக்கை மனிதாபிமானமற்றது, சட்ட விரோதமானது, பொறுப்பே இல்லாமல் நடக்கும் ஆட்சியில்தான் இப்படி நடக்கும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு மேலும் ஆளும் அரசை விமர்சிக்க முடியாது.

## ஃப்ளாஷ்பேக்



### எங்கள் இல்லம் வந்த தலைவருடன்...



கவிஞர் பேரா

2003-ஆம் ஆண்டு நான் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, எனது மாமனாரும் கழகப் பிரமுகருமான பி.முருகன் அவர்கள் திடீரென இயற்கை எய்தினார்.

அப்போது நெல்லை வந்த, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து, மாமனார் அவர்களின் புகைப்படத்திற்கு மாலையிட்டு, மரியாதை செய்தார். தலைவர் வருகையில் வாசலிலிருந்து நான் அழைத்து வந்த புகைப்படத்தை இன்று பார்க்கையிலும் நெகிழ்ச்சியாக இருக்கிறது. அரசுப் பணியில் இருப்பவர் எதிர்க்கட்சி அரசியல் தலைவரோடு எப்படி இருக்கலாம் என சிலர் புகார் அனுப்ப, அந்த எதிர்ப்பையெல்லாம் புறந்தள்ளிப் பணியிலிருந்து டிஸ்மிஸ் செய்தாலும் பரவாயில்லை என நிமிர்ந்து நின்றேன்...

**– கவிஞர் பேரா,**
**தூயதமிழ்ப் பற்றாளர், பாளையங்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு — அண்ணா குடும்பத்திற்கு...

1970-ஆம் ஆண்டு, கலைஞர் பிறந்த நாள் விழா, சென்னை கடற்கரையில் கொண்டாடப்பட்டபோது, ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் நிதி அளிக்கப்பட்டது. அதில் ஒரு லட்ச ரூபாய் அண்ணா அறக்கட்டளை நிதி என்றும், 25 ஆயிரம் ரூபாயைத் தன் விருப்பம்போல செலவழிக்கலாம் என்றும் விழாக்குழுவினர் தெரிவித்தனர். அந்த 25 ஆயிரம் ரூபாய் தொகையை, அண்ணாவின் குடும்பத்திடம் ஒப்படைத்தார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131